மழைநீர் வடிகால் பணியை விரைந்து முடிக்க வேண்டும்

மாநகராட்சி ஆணையர் உத்தரவு

மதனகுப்பம் ஏரி மற்றும் பூங்கா பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாட்டுப் பணிகளை செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்த சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன். உடன், துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக்.

சென்னை, ஜூன் 2: சென்னை மாநகராட்சியில் அம்பத்தூர் மண்டலப் பகுதிகளில் மழை நீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்கவேண்டும் என அலுவலர்களுக்கு ஆணையர் ஜி.எஸ்.சமீரன் உத்தரவிட்டுள்ளார்.

அம்பத்தூர் மண்டலம் மதனகுப்பம் ஏரிக்கு சென்ற ஆணையர் ஜி.எஸ்.சமீரன், படகுசவாரி மற்றும் பூங்கா உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டார்.

பூங்காவில் மியாவாக்கி அடர்வனக் காடுகள் அமைக்கவும், அதற்கான தண்ணீர் வசதியை பூங்காவில் ஏற்படுத்தவும் அறிவுறுத்தினார்.

இதையடுத்து டி.டி.பி.காலனியில் உள்ள கொரட்டூர் ஏரி, ரயில்வே கால்வாய், ஒண்டி வீரன் கால்வாய் ஆகிய நீர்வழிப் பாதைகளையும் அவர் பார்வையிட்டார். அப்போது அங்கிருந்த ஆகாயத் தாமரைகளை அகற்றவும் அவர் உத்தரவிட்டார்.

கால்வாய்களை விரைந்து தூர்வாரவும், மழைநீர் வடிகால்கள் தொடர்பான பணிகளை விரைந்து முடிக்கவும் அவர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சிட்கோ 3-ஆவது பிரதான சாலை முதல் கூவம் வரையிலான மழைநீர் வடிகால் பணிகளையும் அவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அத்திப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள படிப்பகம், உடற்பயிற்சிக் கூடம், குடியிருப்பு சுவர்களில் வரையப்பட்டுள்ள பிரம்மாண்ட ஓவியம் உள்ளிட்டவற்றை ஆணையர் ஜி.எஸ்.சமீரன் பார்வையிட்டார்.

கால்பந்தாட்ட மைதானம், இறகுப்பந்து மைதானம் ஆகியவற்றில் மேற்கொண்ட அடிப்படை கட்டமைப்புகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். குடியிருப்பு வளாகங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளவும், விளையாட்டு மைதானம் அமைக்கவும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

11 காவல் ஆய்வாளர்கள் பணியிட மாற்றம்

சென்னை, ஜூன் 2: சென்னை பெருநகர காவல் துறையில் 11 காவல் ஆய்வாளர்களை பணியிட மாற்றம் செய்து காவல் ஆணையர் ஏ.அமல்ராஜ் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக, செம்பியம் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜி.ராதாகிருஷ்ணன் ஓட்டேரி சட்டம்-ஒழுங்கு பிரிவுக்கும், துரைப்பாக்கம் சட்டம்-ஒழுங்கு பிரிவு காவல் ஆய்வாளர் எஸ்.பிரபு எழும்பூர் குற்றப்பிரிவுக்கும், நுண்ணறிவுப் பிரிவு ஆய்வாளர் ஆர்.விமல் துரைப்பாக்கம் சட்டம்-ஒழுங்கு பிரிவுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பணியிட மாற்றம் செய்யப்பட்ட 11 ஆய்வாளர்களும், ஓரிரு நாள்களில் புதிய பொறுப்பை ஏற்பார்கள் என்று காவல் துறையினர் தெரிவித்தனர்.

மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம்: நாளை தொடக்கம்

சென்னை, ஜூன் 2: திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் கத்திவாக்கம் பகுதிகளைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களுக்கான மதிப்பீட்டு மற்றும் அளவீட்டு முகாம் வியாழன், வெள்ளி (ஜூன் 4, 5) ஆகிய 2 நாள்கள் நடைபெறும் என சென்னை ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய அரசின் 'ஆர்டிபிசியல் லிம்ப்ஸ் மேனுபேக்சரிங் கார்போரேஷன் ஆஃப் இந்தியா' மூலம் காமராஜர் போர்ட் லிமிடெட் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதியின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களுக்கான மதிப்பீட்டு மற்றும் அளவீட்டு முகாம் திருவொற்றியூர், ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் வியாழக்கிழமையும், எண்ணூர், கத்திவாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் வெள்ளிக்கிழமையும் நடைபெற உள்ளது.

இந்த முகாமில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள், காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத்திறனாளிகள், கை, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள், புற உலகு சிந்தனையற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் பல் வகை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்லி கடிகாரம் மடக்கு குச்சி, திறன் பேசி, கைத்தாங்கிகள், ஊன்றுகோல், சக்கர ஊன்றுகோல், முடக்குவாதம் சக்கர நாற்காலி, தொழுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏடிஎல் உபகரணங்கள், டிஎல்எம் உபகரணங்கள் வயது (0-18), சக்கர நாற்காலி, மூன்று சக்கர நாற்காலி, காதொலி கருவி கணுக்கால், முட்டி, பாதம் தாங்கி, முழங்கைக்கு கீழ்/மேல் முழங்கால் கீழ்/மேல் செயற்கை அவயங்கள் உள்ளிட்ட உதவி உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

எனவே, உதவி உபகரணங்கள் தேவைப்படும் திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் கத்திவாக்கம் பகுதிகளைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் தங்களுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை அசலுடன் நகல், மருத்துவச் சான்று அசலுடன் நகல், ஆதார் அட்டை அசலுடன் நகல், யுடிஐடி அட்டை அசலுடன் நகல், ஒரு புகைப்படம், வருமானச் சான்று (மாதம் ரூ.22,500) அல்லது வறுமைக்கோட்டுக்குக் கீழ் வுள்ளோருக்கான அட்டை அசலுடன் நகல் உள்ளிட்ட ஆவணங்களுடன் பங்கேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

பட்டமளிப்பு...

சென்னை கோட்டூர்புரம் தமிழ் இணைய கல்விக் கழகம் கலையரங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு இதழியல் கல்வி நிறுவனத்தின் முதலாம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பட்டங்களை வழங்கிய பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அருண் தம்புராஜ், இதழியல் கல்வி நிறுவன தலைவர் என்.ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன்.

நூற்றாண்டை நெருங்கும் சென்னை புறநகர் மின்சார ரயில் சேவை பிரிவு

சென்னை, ஜூன் 2: சென்னை போக்குவரத்து வளர்ச்சியில் புறநகர் மின்சார ரயில் சேவை தனது நூற்றாண்டை நெருங்கியுள்ளதாகவும், அதில் முதல் வகுப்பு பயணத்துக்கு மக்களிடையே ஆரம்பம் முதல் தற்போது வரை வரவேற்பு குறையாமலிருப்பதாகவும் சென்னை ரயில்வே கோட்டம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்டம் சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

சென்னையில் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் புறநகர் ரயில் சேவை வளர்ச்சி பெற்றது. 11.5.1931-இல் சென்னை கடற்கரை மற்றும் தாம்பரம் இடையே மின்சார புறநகர் ரயில் சேவைகள் தொடங்கின. அப்போது, முதல் வகுப்பு பயண சேவையும் தொடங்கப்பட்டது.

அதுமுதல் தொடங்கப்பட்ட மின்சார மல்டிபிள் யூனிட் (இமு) வகை ரயில்களில் முதல் வகுப்புப் பெட்டிகள் ஒதுக்கப்பட்டன. அச்சிடப்பட்ட தடிமனான அட்டை வடிவ கிரீம் அல்லது பழுப்பு நிற டிக்கெட்டிகளை வாங்கி முதல் வகுப்புப் பெட்டிகளில் பொதுமக்கள் பயணித்தனர்.

இந்தப் பயண முறை 20-ஆம் நூற்றாண்டில் சென்னை முழுவதும் புறநகர் பயணிகள் பயணிக்க உதவுவதாக அமைந்தது. தற்போது, சென்னை மாநகராட்சி வளர்ச்சியடைந்த நிலையில், புறநகர் மின்சார ரயில்களில் முதல் வகுப்புப் பெட்டிகள் குறிப்பிட்ட பிரிவினர் பயணித்த நிலை மாறி, அனைத்துத் தரப்பினரும் பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நீராவி ரயில்களில் தொடங்கி தற்போது அதி நவீனமயமான மின்சார ரயில்கள் வரை முதல் வகுப்புப் பெட்டிகள் பயணிகளிடையே பெரும்வரவேற்பைப் பெற்று விளங்குகின்றன. புறநகர் மின்சார ரயில்கள் வரும் 2031-ஆம் ஆண்டில் நூற்றாண்டை கொண்டாடவுள்ள நிலையில், முதல் வகுப்புப் பயணப் பெட்டிகளும் அதன் பாரம்பரிய நூற்றாண்டை நெருங்குவதுடன், காலத்தை இணைக்கும் பாலமாகத் திகழ்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது அறிவிப்பு

[illegible]

அட்டவணைச் சொத்து

அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட **102 ஏக்கர் மொத்தப் பரப்பளவுள்ள நிலங்கள்**

தமிழ்நாடு மாநிலம், புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சார் பதிவு அலுவலகம், கந்தர்வக்கோட்டை வட்டம், புதுநகர் கிராமத்தில் அமைந்துள்ள, அவை அமைவுபெற்ற சர்வே எண்கள் பின்வருமாறு.

வ. எண்	சர்வே எண்	உட்பிரிவு எண்	பட்டா எண்	ஹெக்டேர்	ஏக்கர்
1.	218	1A2	777	0.7950	1.964
2.	218	1A3	1834	0.8250	2.038
3.	218	1B	831	1.7500	4.323
4.	218	1C	3019	1.1800	2.915
5.	218	1D	161	0.6400	1.581
6.	218	1E	781	0.5300	1.309
7.	218	1F	781	1.3500	3.335
8.	218	1G	2235	1.0000	2.470
9.	218	1H	2413	1.5750	3.890
10.	218	1I	31	0.7300	1.803
11.	218	1J	2511	1.2500	3.088
12.	218	1K	858	1.3000	3.211
13.	218	8A2A1A	2407	4.6216	11.415
14.	218	8A2B	1896	2.3500	5.805
15.	218	8A2C	2653	0.5400	1.334
16.	218	8A2D	873	0.1800	0.445
17.	218	8A2E1	1898	1.4450	3.569

வ. எண்	சர்வே எண்	உட்பிரிவு எண்	பட்டா எண்	ஹெக்டேர்	ஏக்கர்
18.	218	10	2536	2.4850	6.138
19.	218	11	2654	1.0150	2.507
20.	218	12	2719	0.1750	0.432
21.	218	13	2893	0.8084	1.997
22.	218	14	2990	0.4350	1.074
23.	218	1A1D1	797	0.3450	0.852
24.	218	1A1G	2492	1.1300	2.791
25.	218	2	770	1.5550	3.841
26.	218	3	863	0.6450	1.593
27.	218	4	863	4.6950	11.597
28.	218	15	3089	0.6050	1.494
29.	218	14	2990	0.4350	1.074
30.	218	1A1F	2044	1.6200	4.001
31.	218	8B	939	2.1000	5.187
32.	218	8C	873	0.6450	3.841
33.	218	1A1E	711	0.0600	0.148
34.	218	1M	863	0.8100	2.001

எமது வாடிக்கையாளருக்காக மற்றும் அவர்கள் சார்பாக

லிங் லீகல்

4வது தளம், தேர்கு பிரிவு, ராஜ ராஜேஸ்வரி டவர்ஸ், எண். 51 டாக்டர் R.K சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004, இந்தியா

BEFORE THE HON'BLE XII ASST CITY CIVIL COURT AT CHENNAI

O.S.No. 6891 OF 2025

M/s.Canara Bank
Rep by its Authorised Signatory ...Plaintiff

-Vs-

L. Preethika and Another ...Defendants

To

1. **Ms.L.Preethika,** D/o.Loganathan, No.27/14, Veerabadran Street, Mylapore, Chennai-600 004
2. **Mr.K.Loganathan,** S/o.Krishnamoorthy, No.27/14, Veerabadran Street, Mylapore, Chennai-600 004 D2

WHEREAS the above named Plaintiff Bank has filed suit against the defendants for recovery of ₹ **2,57,739.97** along with interest @ 10.60%. This Hon'ble Court was pleased to order **Paper Publication** to both of you returnable by **11.06.2026**.

Hence you are hereby requested to appear in this court in person or through pleader duly instructed on **11.06.2026 at 10.15 a.m.** in the forenoon to file vakalath and defend the case, failing which the suit will be heard and determined Exparte.

T. JAYAKUMAR
Counsel for Plaintiff

TAMIL NADU CIVIL SUPPLIES CORPORATION
HEAD OFFICE, CMRL ADMIN BUILDING,
POONAMALLEE HIGH ROAD, KOYAMBEDU, CHENNAI - 600 107.
Ph.No. (044) 26426773. Email id.: tncsc.tn@nic.in
CIN:U15137TN1972SGC006157

E-TENDER NOTICE

NIT No.QC2/006900/2026 **Dated: 02.06.2026**

Tamil Nadu Civil Supplies Corporation invites online electronic tenders for the **"Supply of Disinfestation Chemicals viz., Malathion 50% EC and Aluminium Phosphide Tablets 56% (F)".**

Complete E-Tender document can be viewed, downloaded and uploaded through **https://tntenders.gov.in/nicgep/app** from **03.06.2026 to 23.06.2026**.

The bidders have to participate in online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-III.

Last Date for Online Submission : 23.06.2026 upto 11.00 AM
Tender Opening Date & Time : 24.06.2026 at 11.30 AM

Principal Secretary / Chairman and Managing Director

DIPR/1990/Tender/2026

கனரா வங்கி केनरा बैंक Canara Bank
Syndicate

General Administration Section, Circle Office, Chennai
No: 524, Anna Salai, Teynampet, Chennai - 600 018. Ph:044 2434 9350

PREMISES REQUIRED

Offers are invited under **TWO-BID SYSTEM** from the owners of commercial space preferably in the Ground floor and ready for occupation with approved layout /construction which is suitable for Bank premises, with required Power load, for Branch and ATM at the following locations:

S. No	Location / Place	District	Carpet Area in sft. (Approximately)	Regional Office
1	MANALI NEW TOWN	THIRUVALLUR	1700	THIRUVALLUR
2	UTHANDI/KANATHUR	CHENGALPUT	1500	TAMBARAM
3	MEENAKSHI NAGAR	KANCHEEPURAM	2000	VELLORE
4	CHENGALPATTU ALAPAKKAM	CHENGALPATTU	1700	TAMBARAM

The details are published in the Bank's Website:
https://www.canarabank.com/tenders.aspx
The necessary application forms may be downloaded from the Bank's Website.
SL No.:1 to 2 Last date for submission : 17.06.2026 up to 3:00PM
SL No.:3 to 4 Last date for submission : 24.06.2026 up to 3:00PM
Further, communications, corrigendum, amendments, if any, will be hosted in Bank's website only.

Place: Chennai, Date : 03.06.2026 **Assistant General Manager, Chennai Circle**

தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு நித்தியகல்யாண பெருமாள் திருக்கோயில்
திருவிடந்தை, திருப்போரூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

திருக்கோயிலில் பிரசாத விற்பனை செய்யும் உரிமம் மற்றும் படக்கடை விற்பனை உரிமம் (பசலி 1436)

டெண்டர் / பொது ஏல அறிவிப்பு

பசலி 1436-க்கு (01.07.2026 முதல் 30.06.2027 வரை) திருக்கோயிலில் பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் மற்றும் கடக்கடை விற்பனை உரிமம் டெண்டர்/ பொது ஏலம் வரும் 19.07.2026 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இந்து சமய அறநிலையத்துறை காஞ்சிபுரம் இணை ஆணையர் முன்னிலையில் நடைபெற உள்ளது. பிரசாதக்கடை உரிமத்திற்கு டெபாசிட் தொகையாக ரூ.5,00,000/ (ரூபாய் ஐந்து லட்சம்), படக்கடை நடத்தும் உரிமத்திற்கு டெபாசிட் தொகையாக ரூ.1,00,000/(ரூபாய் ஒரு லட்சம்), அருள்மிகு நித்யகல்யாண பெருமாள் திருக்கோயில் என்ற பெயரில் வரைவோலையாக (Demand Draft) தனித்தனியாக எடுத்து திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி டெண்டர்/ பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

இதர விபரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

நாள்: 02.06.2026 // இடம்: திருவிடந்தை
செ.ம.தொ.இ/479/வரைகலை/2026

(ஒம்)க.விஜயன்
செயல் அலுவலர்

BEFORE THE HON'BLE XII ASST CITY CIVIL COURT AT CHENNAI

O.S.No. 6890 OF 2025

M/s.Canara Bank
Rep by its Authorised Signatory ....Plaintiff

-Vs-

E. Balaji and Another ....Defendants

To

1. **E.Balaji,** S/o.Ellappan, No.35/10, Sundara Gramani Garden, Mylapore, Chennai-600 004 D1
2. **E.Sripriya,** W/o.Ellappan, No.35/10, Sundara Gramani Garden, Mylapore, Chennai-600 004 D2

WHEREAS the above named Plaintiff Bank has filed suit against the defendants for recovery of ₹ **4,72,345.16** along with interest @ 11.10%. This Hon'ble Court was pleased to order **Paper Publication** to both of you returnable by **11.06.2026**.

Hence you are hereby requested to appear in this court in person or through pleader duly instructed on **11.06.2026 at 10.15 a.m.** in the forenoon to file vakalath and defend the case, failing which the suit will be heard and determined Exparte

T.JAYAKUMAR
Counsel for Plaintiff

BRANCH SHIFTING

மதிப்பு மிக்க எமது வாடிக்கையாளர்களின் சிறப்பான வசதிக்காக, எங்களது

CHENNAI - THIRUNINDRAVUR

கிளையானது **03.09.2026** முதல் கீழே தரப்பட்டுள்ள புதிய முகவரியிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

Muthoot Finance Ltd
Ground Floor, No : 285/A9, CTH Road, Lakshmipuram, 5th Main Road, Thirunindravur, Thiruvallur District, Tamil Nadu State, PIN - 602024.
Phone No : 91889 02152.
Email id : mgthi2992@muthootgroup.com

ஏதேனும் குறைகள் இருப்பின் 0484 4834074 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்

உங்களது ஆதரவையும் உதவியையும் நாங்கள் தொடர்ந்து வரவேற்கிறோம்

Muthoot Finance
A Muthoot M George Enterprise

பாங்க் ஆஃப் பரோடா बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

EC தெரு கிளை
ஓரியண்டல் பில்டிங், எண். 47, ஆர்மேனியன் தெரு, சென்னை - 600 001

மின்னணு ஏல வாகன விற்பனை குறித்த அறிவிப்பு

[illegible]

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	வாகனம் குறித்த விவரம்	
திரு. ராஜ் குமார் S த/பெ. சங்கரநாராயணன் & ஜமுனா ராஜ்குமார் க/பெ. ராஜ்குமார் **முகவரி:** மௌதம் ப்ரெஸ்டீஜ் அபார்ட்மெண்ட், 8F06, நான்காவது தளம், 1வது குறுக்குத் தெரு, பாரதிதாசன் நகர், தாம்பரம் மேற்கு, சென்னை-600045 **மேலும் வசிக்கும் இடம்:** 1/135, நடு தெரு, திருமலாபுரம், தூத்துக்குடி, கப்புலிங்கம்பட்டி, தமிழ்நாடு-628714	பிணை வைக்கப்பட்டுள்ள வாகனத்தின் பதிவு எண். TN 11 AW 5568 MAKE&MODEL: HONDA AMAZE MMC 1.2 VX CVT CAR. ENGINE-L12B47508690 CHASSIS-MAKDF568KM4302994	குறைந்தபட்ச நிர்ணய விலை ரூ. 5,25,000/- டெபாசிட் தொகை ரூ. 52,500/- ஏலத்தொகை அதிகரித்தல் ரூ. 10,000/-

மொத்த நிலுவைத் தொகை : **24.05.2026** தேதிப்படி ரூ. **10,36,405.80** மேலும் வட்டி மற்றும் கூடுதல் செலவுகள், கட்டணங்கள் கணக்கு எண் : 05260600002554

டெ.வணிக்தொகை செலுத்துவது குறித்த விவரம்: பேங்க் ஆஃப் பரோடாவின் **EC** தெரு கிளை கணக்கு எண் 05260015181869ல் பெயர்: **AUCTION PROCEEDS COLLCTION A/C** IFSC- BARB0ECSTRE (5வது இலக்கம் 0) NEFT/RTGS/ பணமாற்றம் முறை மூலம் செலுத்தலாம்.

ஏலத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் **15.06.2026** மாலை **6.00** மணி

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : **17.06.2026** காலை **11.30** மணி முதல் பிற்பகல் **12.30** மணி வரை, [illegible]

வாகன ஆய்வு **15.06.2026**, காலை **11.00** மணி முதல் பிற்பகல் **1.00** மணி வரை [illegible]

விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை https://baanknet.com பார்க்கவும். விருப்பம் உள்ளவர்கள் கிளை மேலாளர் திரு. பிரபீ குமார் நந்தி அவர்களை, கைபேசி எண். 8826208024 தொடர்பு கொள்ளலாம். [illegible]

இடம் : சென்னை, தேதி : 01.06.2026 கிளை மேலாளர், பாங்க் ஆஃப் பரோடா

பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா
பதிவு அலுவலகம்: லோக்மங்கல், 1501, சிவாஜிநகர், புணே-411005
கிளை அலுவலகம்: மிட் கார்ப்பரேட்பிராஞ்ச் (MCB) யூனிட் எண் G-1, தரை தளம், ஷ்ரத்தா ஹவுஸ், கிங்ஸ்வே சாலை, நாக்பூர்-440001.

தமிழ்நாடு மாநிலத்தில் (நடைபெற்று வரும்) HAM கலப்பின சாலைத் திட்ட கட்டுமானத்தில் ஒப்பந்ததாரரை மாற்றுவதற்கான விருப்பம் தெரிவிப்பதற்கான அழைப்பு (INNA)

தமிழ்நாடு மாநிலத்தில், நான்கு வழிச்சாலைக்காக திட்டப்பணிக்காக வடிவமைப்பு, கட்டுமானம், இயக்கம், பரிமாற்றம் ("DBOT") அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு சாலைத் திட்டத்துக்கான ("திட்டம்") ஒப்பந்தம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ("ஆணையம்") ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்திற்கு ("ஒப்பந்ததாரர்") வருடாந்திர நிதி அடிப்படையில் வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரருக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, கடன் வழங்குநர்கள் கூட்டமைப்பின் (ஒட்டுமொத்தமாக, "கடன் வழங்குநர்கள்") சார்பாக பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா ("BOM"), அசல் ஒப்பந்தத்தின் மீதமுள்ள காலத்துக்கு ஒப்பந்ததாரருக்குப் பதிலாகப் பொறுப்பேற்கவும், மீதமுள்ள பணிகளை மேற்கொள்ளவும், கடன் வழங்குநர்களின் நிலுவைத் தொகையைத் தீர்க்கவும், "தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதித் திறனைக் கொண்ட தகுதியான ஒரு நிறுவனத்தை ("தேர்ந்தெடுக்கப்பட்டவர்") அடையாளம் காண்பதற்காக, ஏலம் கோரும் ஆவணம ("ஏல செயல்முறை ஆவணம்") மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, ஒரு வெளிப்படையான ஏல செயல்முறையை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக, ஏல செயல்முறை/ நிகழ் விஷயங்கள் குறித்து கடன் வழங்குநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், ஏல செயல்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், BOB கேப்பிட்டல் மார்க்கெட்ஸ் லிமிடெட் ("BOBCAPS") செயல்முறை ஆலோசகராக ("செயல்முறை ஆலோசகர்") நியமிக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்குநர்கள் சார்பாக பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா, இத்திட்டத்தில் ஒப்பந்ததாரருக்குப் பதிலாக வேறொருவரை நியமிப்பதற்காக, தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதித் திறன் கொண்ட ஆர்வமுள்ள ஏலதாரர்கள் / ஏலதாரர்களின் கூட்டமைப்பிடமிருந்து, கடன் வழங்குநர்கள் மற்றும் ஆணையத்திற்கு ஏற்புடையதாக இருக்கும் வகையில், BOM மற்றும் BOBCAPS-ஆல் வெளியிடப்பட்ட ஏலச் செயல்முறை ஆவணத்தில் ("EOI ஆவணங்கள்") குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில், ஆர்வ வெளிப்பாட்டை ("EOI") இதன்மூலம் வரவேற்கிறது (அத்தகைய ஒவ்வொரு நிறுவனமும் ஒரு "ஆர்வமுள்ள தரப்பு/கள்" ஆகும்). ஒப்பந்ததாரரின் இந்த நியமனம், "உள்ளது உள்ள இடத்தில், உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ள விதத்தில்", "உள்ளது எதுவோ அது", என்ற அடிப்படையில், கடன் வழங்குநர்கள் மற்றும்/அல்லது BOBCAPS-க்கு எந்தவிதப் பொறுப்பேற்மின்றி, ஆணையத்தின் ஒப்புதல்/அனுமதி மற்றும் ஒப்பந்த உடன்படிகைக்கு இணங்குவதற்கு உட்பட்டதாகும்.

திட்டத்தின் சுருக்கமான விவரங்கள், ஆர்வ வெளிப்பாட்டுப் படிவம் மற்றும் ஆவணங்கள் மேலும் ஏதேனும் கூடுதல் தகவல்கள் மற்றும் புதிய தகவல்களுக்கு ஆர்வமுள்ள தரப்பினர் BOBCAPS-இன் இணையதளத்தைப் (https://www.bobcaps.in/tenders/) பார்க்கலாம். ஏலச் செயல்முறை ஆவணங்கள், ஆர்வ வெளிப்பாட்டுப் படிவ ஆவணங்கள் மற்றும்/ அல்லது ஏலச் செயல்முறைகளில் ஏதேனும் திருத்தம்/மாற்றம் செய்ய முன்மொழியப்பட்ட பரிவர்த்தனை தொடர்பான கூடுதல் புதிய தகவல்கள் பெற மேலே குறிப்பிடப்பட்ட இணையதளத்தை தவறாமல் பார்வையிடவும்.

விருப்பமுள்ள எந்தவொரு தரப்பினரும், தங்களது ஆர்வ வெளிப்பாட்டை (EOI) project.alpha@bobcaps.in மற்றும் brmgr2828@bankofmaharashtra.bank.in ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுக்கு, மின்னஞ்சல் அனுப்பப்பட்ட 2 (இரண்டு) வேலை நாள்களுக்குள், அதன் அச்சுப் பிரதியுடன் சேர்த்து, நேரிலோ தபால் அல்லது கூரியர் மூலமாகவோ (விருப்பமுள்ள தரப்பினரின் பொறுப்பு மற்றும் செலவில்) ஒரு முத்திரையிடப்பட்ட உறையில் சமர்ப்பிக்கலாம். அந்த உறையின் மீது " Expression of Interest for Substitution of Concessionaire undertaking road project in Tamil Nadu" என்ற வாசகம் எழுதி, "**K/A- தலைமை மேலாளர், பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா, மிட் கார்ப்பரேட் பிராஞ்ச் (MCB) யூனிட் எண் G-1, தரை தளம், ஷ்ரத்தா ஹவுஸ், கிங்ஸ்வே சாலை, நாக்பூர்-440001. மகாராஷ்டிரா, இந்தியா** " என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

BOBCAPS
BOB கேபிடல் மார்க்கெட்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 1704, B விங், 17வது தளம், பரினி கிரெசென்சோ ப்ளாட் எண்.C-38/39, G பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400 051. | CIN: U65999MH1996GO1098009

ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்பட்டால், பின்வருபவர்களைத் தொடர்பு கொள்ளவும்:

தொடர்பு நபர்	அலைபேசி எண்	மின்னஞ்சல் முகவரி
திரு.சாகர் பத்ரா (BOBCAPS)	+91 7666412395	project.alpha@bobcaps.in
திருமிகு மைத்ரி ஷேத் (BOBCAPS)	+91 9867939303	
திரு. அஜித் குமார் மீனா (BOM)	+91 8767275174	brmgr2828@bankofmaharashtra.bank.in

பொறுப்பு துறப்பு:
இந்த விளம்பரம், ஏல செயல்முறையை மேற்கொள்வதற்கும் மற்றும்/அல்லது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்டவரைத் தேர்ந்தெடுப்பதற்கும் BOM மற்றும்/அல்லது கடன் வழங்குநர்கள் மற்றும்/அல்லது BOBCAPS தரப்பில் எந்தவொரு கடப்பாட்டையும் ஏற்படுத்தாது மற்றும் அவ்வாறு கருதப்படவும் மாட்டாது. BOM, கடன் வழங்குநர்கள் மற்றும் BOBCAPS, ஏல செயல்முறையிலிருந்து அல்லது அதன் எந்தப் பகுதியிலிருந்தும் விலகிக்கொள்ள/ நிறுத்திவைக்க/ரத்துசெய்ய, ஏல செயல்முறையின் எந்தவொரு கட்டத்திலும், எந்தவொரு/அனைத்து ஆர்வ வெளிப்பாட்டுச் சலுகைகளையும் ஏற்க அல்லது நிராகரிக்க, மற்றும்/அல்லது ஏல செயல்முறையை அல்லது அதன் எந்தப் பகுதியையும் மாற்றியமைக்க அல்லது எந்தவொரு நிபந்தனைகளையும் எந்தக் காரணமும் கூறாமல், எந்தப் பொறுப்புமின்றி மாற்றுவதற்கான உரிமையை தங்கள் வசம் வைத்துள்ளனர். இது ஒரு வாய்ப்பளிப்பு ஆவணம் அன்று. ஏல செயல்முறை ஆவணத்தை வெளியிடுவது, BOM மற்றும்/அல்லது கடன் வழங்குநர்கள் மற்றும்/அல்லது BOBCAPS தேர்ந்தெடுக்கப்பட்டவரைத் தேர்ந்தெடுக்கக் கடமைப்பட்டுள்ளனர் என்று அர்த்தப்படுத்தாது. இதில் மற்றும்/அல்லது ஏல செயல்முறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிவர்த்தனை தொடர்பாக, ஏலதாரர்கள்/ஆர்வமுள்ள தரப்பினர்(கள்) ஏற்கும் எந்தவொரு செலவுகள் மற்றும் கட்டணங்களுக்கும் BOM மற்றும்/அல்லது கடன் வழங்குநர்கள் மற்றும்/அல்லது BOBCAPS எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார்கள். இந்த விளம்பரம், ஏலச் செயல்முறை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புத் துறப்புகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டது.

தேதி: ஜூன் 03, 2026
இடம்: நாக்பூர்

ஒம்/- அதிகாரப்பூர்வ கையொப்பதாரர்
பேங்க் ஆஃப் மகாராஷ்டிரா -க்காக